கவன ஈர்ப்புகள்

(திரு. கு. ரமணி)

கேள்வித் தாள்கள் லீக் அவுட் ஆகி, தேர்வுகளை அந்தக் குறிப் பிட்ட நாளில் நடத்த முடியாமல் போவதும் இந்த நிலை நிச்சய மாக மற்ற பாகங்களில் இருக்கக்கூடிய கல்வி அமைப்புகளிலே மோசமான ஒரு நிலைமையை உருவாக்கும்.

ஆகவே கேள்வித் தாள் லீக்-அவுட் ஆகாமல் இருப்பதற்கு ஒரு ஃபுல் பூரூஃப் திட்டம் ஏதாவது நம்முடைய அரசினுடைய கவனத்தில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த தேர்வுகள் அரசு நடத்துகின்ற தேர்வுகள் அல்ல. பல்கலைக் கழகம் என்கின்ற தன்னாட்சி நிறுவனம் நடத்துகின்ற தேர்வு. நடைபெற்ற குறைபாடு நம் முடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்தில் அவர்களிடத்தில் சொல்லி அந்த குறைபாட்டை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளு கின்ற பொறுப்பைத்தான் அரசு செய்ய முடியும். மற்றபடி தேவையான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டும். நம்முடைய பிரதிநிதி மூலம் எடுக்கச் செய்ய வேண்டும். ஆனால் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தேர்வுகள் சம்பந்த மாக இந்த ஒரு குற்றம் மட்டும் நடைபெறுவதில்லை. வேறு சில சந்தர்ப்பங்களில் கேட்டதை போல், தேர்வை கண்காணிக் கின்ற ஆசிரியர்களை அடிக்க வருவது, மாஸ்-காப்பியிங் என்று சொல்லுகின்ற அளவிற்கு பார்த்து எழுதுகின்ற குற்றங்கள் நடைபெறுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கின்றபோது இதற்கு தனி திட்டம் அல்ல தனி சட்டமே கொண்டுவர வேண்டும். அப்படி ஒரு சட்டம் கொண்டுவந்த போது இந்த மாமன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புக் காட்டியதன் காரணமாக அதை பின்வாங்கிவிட்டோம். ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் இது போன்ற கிரிமினல் குற்றங்களை நாம் தடுக்க முடியும். இதை தடுக்காமல் வேறு எதையும் செய்து பிரயோசனம் இல்லை. காரணம் இது படிப்பு சம்பந்தமானது. படித்துவிட்டு வேலைக்கு போவது சம்பந்த மானது. இவர்கள் வந்துதான் நம்மையெல்லாம் நிர்வாகம் செய்யப்போகிறார்கள். இதிலே மிகவும் கடுமையாக இருந் தாக வேண்டும். இதற்கு திட்டம் அல்ல. சட்டம் வேண்டும்.

(20) தஞ்சை, ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு பகுதியிலுள்ள ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள்

கவன ஈர்ப்புகள்

(திரு. ப. பொன்னுரங்கம்)

கடந்த 26-4-1986 அன்று ஆண்டு இறுதித் தேர்வு எழுதிக் கொண்டிருந்தபொழுது பள்ளிக் கட்டிடம் கூரையுடன் இடிந்து விழுந்ததால் நீலமேகம் என்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் இறந்தும், செந்தில்குமார், கோவிந்தராஜ் ஆகிய 2 மாணவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் உள்ளதால் பாதிக்கப்பட்டோர் குடும்பத்தார் மற்றும் ஆசிரியர், மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் நாள் அன்று பிற்பகல் சுமார் 3.00 மணிக்கு திடீரென்று எதிர்பாராமல் வீசிய சுழற்காற்றாலும், பெய்த பெருமழையாலும் தஞ்சாவூரி லிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் கூரை வேயப்பட்ட துணைக் கட்டடம் ஒன்று விழுந்துவிட்டது. அக்கட்டடத்தில் தேர்வு எழுதிக் கொண்டிருந்த மாணவர்களில் ஒன்பதாம் வகுப்பு மாணவன் என். செந்தில்குமாருக்கு இவ்விபத்தினால் இடது கால் எலும்பு முறிவும், 11-ம் வகுப்பு மாணவன் என். கோவிந்த ராசனுக்கு சிறு காயமும் ஏற்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் தேர்வைக் கண்காணிப்பு செய்து கொண்டிருந்த வேதியியல் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் திரு. நீலமேகம் என்பவர் கூரை விழுந்ததும் தப்ப முயற்சி செய்ததில் இடிபாடுகளிடையே சிக்கிக் கொண்டு பின்பு தஞ்சை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் இரவு சுமார் 8-00 மணிக்கு மரணமடைந்துவிட்டார். ஒன்பதாம் வகுப்பு மாணவன் என். செந்தில்குமாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உடல் நிலை தேறிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 11-ஆம் வகுப்பு மாணவன் என். கோவிந்தராஜனுக்கு சிறு காயமே ஏற் பட்டதால் புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

கூரை சரிந்த கட்டடத்தின் மற்றொரு வகுப்பறையில் தேர்வு கண்காணிப்பு பணியில் இருந்த திரு. இரா. இராதாகிருஷ்ணன் என்பவர் சிறுகாயத்துடன் தப்பியுள்ளார். இவர் மருத்துவ சிகிச்சை பெறுமளவுக்கு பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

2. விபத்துக்குள்ளான மேற்படி கட்டடம் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் பொதுப் பணித் துறை யினரால் கட்டப்பட்டது. இவ்வாண்டு மார்ச்சு மாதம் 25-ஆம்

(திரு. செ. அரங்கநாயகம்)

தேதியன்று பொதுப் பணித்துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு தளம் செப்பனிடப்பட்டு வெள்ளையடித்து கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இச்சம்பவத்தை தொடர்ந்து, மழை மற்றும் பலத்த காற்று அடிக்கும் நேரங்களில் கூரைக் கட்டடங்களிலும் மற்றும் பாதுகாப்பற்ற இடங்களிலும் வகுப்புகளை நடத்த வேண்டாம் என அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4. ஆகவே இப்பள்ளியில் ஏற்பட்டுள்ள விபத்து இயற்கையின் சீற்றத்தினாலேயேயன்றி வேறு எந்தக் காரணங்களினாலும் அல்ல.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டிடத்தினால் ஒரு முதுநிலை ஆசிரியர் இறந்திருக்கிறார். ஒரு மாணவருக்கு ப்ரேக்சர் ஆகியிருக்கிறது. இந்த கட்டிடம் 1978-ல் கட்டப்பட்டது. அதுமட்டுமல்ல. இந்த விபத்து நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால்தான் பழுது பார்க்கப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டுள்ளது. தனியாரால் அல்ல. பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட்டால். ஆகவே பொறுப்பற்ற முறையில் பி.டபிள்யூ.டி. கட்டிடம் கட்டி பழுது பார்த்ததால் கல்வித் துறையிலே மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளில் இப்படிப்பட்ட உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. சம்பந்தப்பட்ட பி.டபிள்யூ.டி. அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அந்த பாதிக்கப்பட்டு இறந்த ஆசிரியர் குடும்பத்திற்கும், பாதிக்கப்பட்ட மாணவர் குடும்பத்திற்குப் அரசு நஷ்ட ஈடு வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு விசாரித்து, இதிலே யார் பொறுப்பானவர்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்படும். அந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான முறையில் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று அரசு பரிசீலிக்கும்.

(21) தஞ்சை, பந்தநல்லூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. இராசாங்கம், டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.